[திரு. ஞா. செந்தமிழன்] [2014 ஆகஸ்ட் 11

வாழ்வளிக்கும் வரலாறாக வாழும் (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளும் நல்லவர்; நாடு நலம்பெற நாளும் உழைப்பவர்; வாக்குறுதிகளுக்கெல்லாம் வளம் சேர்ப்பவர்; வையகம் முழுவதும் புகழ்பெற்றவர்; ஜகத்தின் மகத்தான முதல்வர்; அன்னையாய், ஆசானாய், தெய்வமாய் காத்துவரும் இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2013–2014 ஆம் ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் பன்னிரண்டாவது மற்றும் பதின்மூன்றாவது (பதினான்காவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11–45

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2014 ஆகஸ்ட் 11][திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

“2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச்சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச்சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*